அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் : 196 /2016
தேதி : 29.12.2016

**அதிமுக பொது செயலாளராக திருமதி சசிகலா நடராஜன் அவர்கள், ஏக மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு, அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் பாராட்டு.**

1972 ஆண்டு புரட்சி தலைவரால் துவங்கப்பட்டு, இன்று வரை மிகப்பெரிய அளவில் மக்கள் மனதில் இடம் பெற்றது அதிமுக இயக்கம். புரட்சி தலைவர் மறைவுக்கு பின்னர் ஏறக்குறைய 27 வருடங்கள் இந்த மாபெரும் இயக்கத்தை வழிநடத்தி இயக்கத்தின் சகோதர சகோதரிகளுக்கு தாயாகவும் தமிழக மக்களுக்கு சிறந்த தலைவராகவும் முதல்வராகவும் விளங்கிய புரட்சி தலைவியால் வழி நடத்தப்பட்ட இந்த இயக்கத்திற்கு, புரட்சி தலைவி அவர்களின் அரசியல் பயணத்திலும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் எந்த சூழலாக இருந்தாலும் உறுதுணையாக இருந்து வந்த திருமதி சசிகலா நடராஜன் அவர்கள், அதிமுக பொது செயலாளராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன்.

நேரிடையாக இல்லை எனினும் அவருடைய 33 வருட அரசியல் பயணம் அனைவரும் அறிந்ததே. புரட்சி தலைவியை இழந்து தவிக்கின்ற இவ்வியக்கத்தை மிகச்சிறப்பான முறையில் வழி நடத்தி செல்வார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

அவருக்கும், அவரை தேர்ந்தெடுத்த அதிமுக நிர்வாகிகளுக்கும் எனது சார்பிலும் சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்